# ஜநவிநோதிநி.

இல. 2, 3.] { பெப்ருவரிமீ மார்ச்சுமீ. } 1886. [ புஸ்த. XVII.


## நாகாநந்தநாடகக் கதை.

(தொடர்ச்சி.)

வித்தியாதரராஜன் மகனாகிய ஜீமூதகேதுவும், சித்தராஜன் மகளாகிய மலயவதியும் ஒருவரையொருவர் கண்டதுமுதல் ஒருவரையொருவர் கலியாணஞ்செய்துகொள்ள வேண்டுமென்று ஒருவருக்கொருவர் தெரியாமலே தனித்தனி ஆசைகொண்டிருந்தார்களென முன் கூறினோமே. அது அவ்வாறிருக்க, மலயவதியின் தாய்தந்தையர்கள் தங்கள் மகளுக்குக் கலியாணம் செய்துகொள்ளத்தக்க வயது வந்துவிட்டது கண்டு தகுந்தவரனைத்தேடி விவாஹஞ்செய்துகொடுக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, வரனைத் தேடிப்பார்க்கத் தலைப்பட்டார்கள். தேடிப்பார்த்துக் கடைசியில் ஜீமூதவாகனனல்லது வேறே யாரும் மலயவதிக்கு ஏற்ற மணவாளனல்லனென்று தேறி, தமது மைந்தன் மித்திராவசுவை அழைத்து, குழந்தாய், உன் தங்கையை ஜீமூதவாகனனுக்கு விவாஹம்செய்துகொடுப்பதாய் யோசிக்கிறோம் என்றுசொல்ல, மித்திராவசு, நீங்கள் யோசித்தது மிகவும் உத்தமந்தான்; ஜீமூதவாகனன் வித்தியாதர அரசன், கலைகள் அனைத்தும் கற்றுணர்ந்தவன், நற்குணநற்செய்கைகள் குடிகொண்ட மனத்தன், பராக்கிரமமுடையவன், பார்வைக்கோ மன்மதனையும் மயக்க வல்ல வடிவழகுள்ளவன். இந்தக் குணங்களை யோசிக்குமிடத்து நமது மலயவதிக்கு அவன் மணவாளனாக வாய்ப்பது நமது பாக்கியமென்றே சொல்லலாம். ஆனால் ஒன்று, அவன் தயாகுணம் குடிகொண்டவன். அயலார்க்குத் துன்பம் நேரக் கண்டானாகில் தன்னுயிரை மாற்றிக்கொடுத்தாகிலும் அவர்களைக் காப்பாற்றுந் தீரமுடையவன். இதை யோசிக்குமிடத்தில் மாத்திரம் சற்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது என்றான். அது கேட்டு அவர்கள், குழந்தாய், மித்திராவசு, நீ சொல்வது உண்மை

யே; ஆயினும் ஒரு பெரிய நற்குணத்தையே துர்க்குணமாய் எடுத்துக் கூறுகின்றாயே: கோமகனுக்குக் காருணியமும் ஒரு பெருங்குணமன்றோ! நமது கௌரீதேவி யாதும் குறைநேரும்படி விடாள்; அவனையன்றி வேறே தகுந்தவான் யாரும் காணோம். நீ அவனிடம் சென்று மலயவதியைப் பாணிகிரகணம் செய்துகொள்ளும்படி பிரார்த்தித்து வா என்று கட்டளையிட, மித்திராவசுவும் அப்படியேயென்று ஜீமூதவாகனனிடம் செல்வதாய்ப் புறப்பட்டான்.

அன்றையதினம் ஜீமூதவாகனன் தான் தாய்தந்தையர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை விரைவிலே செய்துமுடித்துவிட்டு, விதூஷகனுடன்கூடித் தேவியின் ஆலயத்திற்குச் சமீபத்திலுள்ள கதலீவனத்தருகே போயினன்.

அந்தக் கதலீவனத்தில் மலயவதியின் தாபம் திரும்படி தோழிகள் சீதோபசாரம் செய்துகொண்டிருந்தார்கள். அது யாதும் பயன்படாமற்போகவே அவர்கள், இவள் தாபம் நிமிஷத்திற்கு நிமிஷம் வளராநின்றதே, என்னவாய் முடியுமோ என்று மனங்கலங்கி வருந்திக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஜீமூதவாகனன் வருவதைக் கண்ட தோழிகள், இங்கே யாரோ புருஷர்கள் வருகிறார்கள் என்று சொல்லி, மலயவதியுடன் அருகேயிருந்த ஒரு புதரில் மறைந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஜீமூதவாகனனும் விதூஷகனும் அவ்வாழைத்தோப்பிலுள்ள சந்தனமாளிகைக்குச்சென்று பளிங்கு மண்டபத்திலுள்ள சந்திரகாந்தச் சிலையில் உட்கார்ந்து அடியில்வருமாறுபேசத்தொடங்கினார்கள்.

விதூஷகன் ஜீமூதவாகனனுடன், தோழா, நீ ஏது இன்றைக்கு நித்தம்போலன்றி விரைவிலே பணிவிடைகளை முடித்துக்கொண்டுவந்தது; மேலும் ஒருநாளுமில்லாமல் இன்று இம்மாளிகைக்கு வந்தாயே, இதன் காரணம் என்ன சொல்லென்று கேட்க, ஜீமூதவாகனன், நண்பனே, சொல்கிறேன் கேள்: நேற்றிராத்திரி நான் ஒரு கனவு கண்டேன்; அதாவது, எனது பிராணநாயகி இந்த மணிமேடையில் உட்கார்ந்திருந்தாள்; நான்வரக் கொஞ்சம் தாமதம் ஆகவே என்மீது கோபங்கொண்டு உதடுதுடிக்கக் கண்களில் நீர்பெருகத் தலையைத் தொங்கவைத்துக் கொண்டிருந்தாள். இவ்விதமான கனவுகண்டபடியால் என்னவோவென்று மனதில் அச்சங்கொண்டு இந்த மணிமேடைக்கு வரவேண்டுமென விரும்பி, பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைக் குறைவில்லாமல் விரைவிலே செய்துவிட்டுவந்தேன்; நான் சொப்பனத்தில் கண்டபடி இம்மணிமேடையில் என் பிரியை யில்லாமலிருப்பதால் இப்பொழுது இதைப் பார்க்க எனக்கு அருத்துயருண்டாகிறது என்று பெருமூச்செறிந்தான்.

அதுகேட்டு விதூஷகன், தோழனே, முன்னே நீ வெகு தீரனு

யிருந்தாயே; அந்தத் தைரியமெல்லாம் இப்போதெங்கே போய் விட்டது என, ஜீமூதவாகனன், நீ ஒன்றும் தெரியாதவனைப் பேசு கிறாய்; நான் இப்போது தீரனாகத்தானேயிருக்கிறேன்: பூரணசந் திரன் பிரகாசிக்கும் நிலவுநாளிரவுப்பொழுதுகள் எத்தனையோ வந்தனவே; அவைகளில் நான் யாதும் அபாயமின்றிப் பிழைத் திருக்கிறேனன்றோ? செங்கழுநீர், கருநெய்தல் முதலிய மலர்களை மோந்துமிருக்கிறேன்; மல்லிகைகம்மும் தென்றல்வீச அதனையும் உடம்பில் தாங்கியிருக்கிறேன்; வண்டுகள் ரீங்காரஞ்செய்வதையும் குயில்கள் கூவுவதையும் கேட்டு மனஞ்சலியாதிருக்கிறேன்; இவ் வாறிருக்க நீ என்னைத் தைரியமில்லாதவனென்று சொல்லத் துணிந் தது என்னகாரணம் என்றான். விதூஷகன் அதுகேட்டு, நான் சொன் னது அதைப்பற்றியன்று; தேகமேயில்லாதவனான மன்மதன் மலர்க ளைக்கணையாக எறிய, நீ அதைப் பொறுக்கமாட்டாதவனாய்த் தவிக் கிறாயே என்பதைக்கொண்டு சொன்னேன் என்றான். ஜீமூத வாஹனன், ஆயின், நீ சொல்வது உண்மையே. இப்பொழுது என் காதற்கிளியை இந்த மணிமேடையில் எழுதிப் பார்த்துக்கொண்டி ருக்க விரும்புகிறேன்; நீ அதோதெரிகிற விளையாட்டு மலையிலிருந்து காவிக்கற்கள் கொண்டுவா என, விதூஷகன் கொண்டுவந்து கொடுக்க, அதனால் அரசன் மலயவதியின் உருவத்தை எழுதிமுடித் தான். ஜீமூதவாகனன் மலயவதியின் வடிவழகை எழுதியதைக் கண்ட விதூஷகன் ஆச்சரியங்கொண்டு, தோழனே, எதிரில் இருப் பதைப்பார்த்து எழுதுவதுகூட அரிதாக நினைத்திருந்தேன்; நீ உன் பிரியை எதிரிலில்லாதிருக்கையிலேயும் அவள் உருவத்தை இதில் இத்துணை அழகாய் எழுதிமுடித்தாயே, நீ வெகு ஸமர்த்தன் என, ஜீமூதவாகனன், நீ அவ்வாறு நினைக்கவேண்டாம்; இது நான் பாரா தெழுதியதன்று; எனது தியானத்தால் பிரியையை எதிரேவைத்துப் பார்த்துக்கொண்டே எழுதினேன் என்று கூறினான்.

புதர்மறைவில் ஒளித்து நின்று இவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த மலயவதி, ஜீமூதவாகனன் மீது மிகுந்த ஆசைவைத் திருந்ததனால், இவன் இப்போது வேறே யாரோ ஒரு பெண்மேல் காதல்கொண்டவனென்று நினைத்து, இனிப் பிராணனை விடுவதுதவிர வேறுவழியில்லையென்று நிச்சயிக்கலானாள். வெகு நேரமாக ஜீமூத வாகனனும் விதூஷகனும் பேசிக்கொண்டிருந்தும் மலயவதி என் னும் பெயர்மாத்திரம் சொல்லப்படாமையாலும், மணிமேடையில் எழுதப்பட்ட உருவம் கண்ணுக்குத் தெரியாமையாலும் மலயவதி அவ்வாறு நினைக்கவேண்டியதாயிற்று. ஜீமூதவாகனன், மலயவதி யைப் பார்த்ததுமாத்திரமேயல்லது அவளின்னாளென்றும், அவள் பெயர் இன்னதென்றும் தெரிந்துகொள்ளவில்லையாகையால், அவன் அவளைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் சொல்லக்கூடாமல், பிரியை, காதற்கிளியென்று இப்படி பொதுவாகவே சொல்லிவந்தான். வடி

வழகைமாத்திரம் கண்ணூரக்கண்டவனுகையால், அவளை உள்ளபடியே மணிமேடையில் எழுதிமுடித்திருந்தான்.

இதற்குள் ஜீமூதவாகனனிடம் போவதாக வீட்டினின்று புறப்பட்ட மித்திராவசு, ஜீமூதவாகனன் வாழைத்தோட்டத்திலிருப்பதை அறிந்து அவ்விடம்வந்து சேர்ந்தான். அவன் வருவதைக்கண்டு அரசனும் விதூஷகனும் ஓர் வாழையிலையால் மணிமேடையில் எழுதியிருந்ததை மறைத்துவிட்டு, வந்தவனுக்கு மரியாதைசெய்து உபசரித்தார்கள். மித்திராவசு தலைவணங்கி, ராஜகுமாரனே, என் தகப்பனுர் விசுவாவசு என்னை உம்மிடம் அனுப்பினுர்; எனக்கு மலயவதி என்று ஒரு தங்கையிருக்கிறுள்; அவளை உமக்குக் கன்னிகாதானஞ்செய்துகொடுக்கவேண்டுமென என் பிதா திருவுளம்பற்றியிருக்கிறுர். இவ்விஷயத்தில் உம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளும்படி நான் உம்மிடம் வந்தேன்; நீர் அதை அங்கீகரித்து எங்கள் மனோரதத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ஜீமூதவாகனன், விசுவாவசுவின் மகள் யாரோ வேறொருத்தி என்று நினைத்து, சுவாமீ, கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல, உங்களுடைய ஸம்பந்தம் சிறிதும் வருத்தப்படாமல் தானே கிடைக்கிறதென்றுல் யாராவது அதை வேண்டாமென்று தடுப்பார்களோ? கரும்புதின்னக் கூலிகொடுக்கவேண்டுமோ? ஆனுல் ஒன்று; நான் வேறொரு மகளை மணம்புரிந்துகொள்ளவேண்டுமென மனதில் நிச்சயித்திருக்கிறேன்; ஆதலால் பிரகிருதத்தில் உங்கள் இஷ்டத்துக்கு இணங்கிநடக்கக் கூடாமையாயிருக்கிறதென்று பதிலுரைத்தான். அதுகேட்டு மித்திராவசு மனதில் ஸங்கடத்துடனே, ஓ குமாரனே, நான் இவ்வளவுதூரம் வேண்டிக்கேட்டுக்கொண்டதற்கு நீர் இப்படிதானு மறுமொழிகூறுகிறதென்று சொல்ல, விதூஷகன், ஸ்வாமீ, தேவரீர் இவனைக் கேட்பானேன்; இவன் தாய்தந்தையர்கள் இருக்கிறுர்களே, அவர்களைக் கேட்டு உமது அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று கூற, மித்திராவசு, ஆம், நீர்சொல்வது உண்மையே; இவர் தாய்தந்தையர்களின் உத்தரவை மறுத்து யாதொன்றும் செய்யத்துணியார்; அவர்களைப்போய்ப் பிரார்த்திக்கலாமென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போய்விட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மலயவதி, மிகுந்த விசனமடைந்தவளாகி, "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்றுநினைக்கும்" என்கிற பழமொழி நமக்குத்தானே உண்மையாயிற்று. நம்மை மணம்புரிந்துகொள்ள இவருக்கு மனமில்லாதபக்ஷத்தில் இனி நாம் பிராணனை வைத்திருப்பதில் பயனில்லை; உடனே பிராணனை விட்டுவிடவேண்டுவதுதானென்று துணிந்து, ஸகிகளைநோக்கி, ஸகிகாள், நீங்கள்போய் மித்திராவசு அவ்விடம்விட்டுச்சென்ருரா இல்லை

யா பார்த்துவாருங்கள்; நாம் வீட்டிற்குப் போகலாமென்றுசொல்லி ஸகிகளை அனுப்பிவிட்டாள். அவர்கள் சிறிதுதூரம் போனவுடனே, இவள் மனதில் வேறே என்னவோ யோசித்திருப்பதாய் ஐயமுற்று, ஒருத்திமாத்திரம் அங்கேயே மறைவாய்நின்று என்ன நடக்கிறதோ என்று பார்த்துக்கொண்டிருக்கும்படி சொல்லிவிட்டுப் போனார்கள். மலயவதி நாலுபுறமும் சுற்றிப்பார்த்து அருகில் ஒருவருமில்லாதிருப்பதுகண்டு ஒரு கொடியை எடுத்துச் சுருக்குப் போட்டு, தேவீ, கௌரீ, இந்தச் சரீரத்தில் என் மனோரதத்தை நீ நிறைவேற்றாமல் போய்விட்டாய்; மறுபிறப்பிலாவது கருணைகூர்ந்து என்னிஷ்டத்தை நிறைவேற்றிவைக்கக்கடவாய் என்று கைகூப்பிச்சொல்லித் தொழுதுவிட்டு, அதைக் கழுத்தில் மாட்டிக்கொண்டாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த தோழியானவள் உடனே ஓடிவந்து, ஜீமூதவாகனன்முன்னே விழுந்து, சுவாமீ, எங்கள் ராஜகுமாரி சுருக்குப்போட்டுக்கொண்டு உயிரை விட்டுவிடப் போகிறாளே; தாங்கள் இத்தருணத்தில் எங்களைப் பாதுகாத்தருள வேண்டுமென்று முறையிட்டாள். அதைக்கேட்ட க்ஷணமே அவர்கள் இருவரும் எழுந்து சேடியுடன்கூட மலயவதி யிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

ஜீமூதவாகனன் மலயவதியைக் கண்டதும் பரபரப்புடன் ஓடி, கையிலிருந்த கொடியைப் பிடுங்கியெறிய, மலயவதி, ஜீமூதவாகனனைக் கண்டு, இதென்ன அநியாயம்! நான் என் பிராணனை விட வேண்டுமென்றால் அதற்குக்கூடத் தாம் தடைசெய்வானேன்? என் கையை விடுமென்று கையைத்திமிறிக்கொள்ளப்போக, ஜீமூதவாகனன், நான் அரசன், முத்துமாலைஅணியவேண்டிய இடத்தில் கொடிக்கயிற்றைப் போட்டதாகிய பெருங்குற்றத்தை இக்கை செய்தது; இதற்குத் தக்க சிக்ஷைவிதிக்கவேண்டும்; விடக்கூடாது என்றான்.

இவள் உயிரைவிடத் துணிந்ததற்கு யாதுகாரணமென்று அப்பொழுது விதூஷகன் தோழியைக்கேட்க, அவள், உம்முடைய நேசரே காரணம் என்று மறுமொழிகூற, ஜீமூதவாகனன், அதன் கருத்தென்ன, விளங்கவில்லையே என்றுகேட்க, இப்போது இவள் தமையனார் மித்திராவசு வந்து இவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டதை மறுத்ததுதான் என்று அவள் மொழிந்தாள். ஜீமூதவாகனன் அதைக்கேட்டு, இவள் விசுவாவசுவின் மகளென்றறியாமல் மோசம்போனேமேயென்று தனக்குள் சிந்தித்து வருந்திக்கொண்டிருக்க, தோழி, இன்னும் ஒன்று: யாரோ வேறே ஒரு நாயகியின்மேல் தாம் அன்புகூர்ந்து அவளைச் சித்திரமெழுதிப் பார்த்துக்கொண்டிருந்தமையால், அவள்மீது வைத்த அன்பே தன்னை மறுத்ததற்குக் காரணமென்று இவள் நினைத்திருக்கிறாளென்றும் தெரிவித்தாள். விதூஷகன் இதைக்கேட்டதும், அப்படியாயின் என் தோழன்மீது யாதும் குற்றமில்லை; அது நிச்சய

மென்று தோன்றாவிட்டால் எல்லோரும்போய் நேரில் மணிமேடையிலே யாரை எழுதியிருக்கிறதோ பார்த்துவிட்டு வருவோமென்று உரைத்தான். மலயவதி கையைத் திமிறிக்கொள்ளப்போக, ஜீமூதவாகனன், என் பிரியையை நான் எழுதியிருக்கிறேன்; அங்கேபோய்ப் பார்க்குமளவும் கையைவிடமாட்டேனென்று கையைப் பிடித்து அழைத்துக்கொண்டுசென்று வாழை இலையை எடுத்து அப்புறம் போட்டு, பார் என்று காட்டினான். அங்கே தன்னையே எழுதியிருப்பதைக் கண்டு மலயவதி யாதும் மறுமொழிகூறமாட்டாமல் வெட்கத்தால் தலைகுனிந்துகொண்டு நின்றாள். விதூஷகன், இப்போது உங்களிருவருக்கும்*காந்தர்வவிவாஹம் நிறைவேறிவிட்டது; இனிக்கையை விட்டுவிடலாமென்றுகூற, ஜீமூதவாகனன் அப்படியே என்று கையை விட்டுவிட்டான்.

இது நிற்க, மித்திராவசு ஜீமூதவாகனனுடைய தாய்தந்தையரிடம் சென்றதாகக் கூறினோமே; அது பின்பு எவ்வாறாயிற்றென்பீர்களோ? அவ்வாறே அவன் அவ்விடஞ்சென்று தன்மனோரதத்தை வெளியிட்டுப் பிரார்த்திக்க, அவர்கள் வெகு சந்தோஷமாய் ஒப்புக்கொண்டார்கள். அதனால் மலயவதிக்கு அலங்காரம் செய்யுநிமித்தம் அவளை அழைத்துவரும்படி சேடியை அனுப்பினார்கள். அவள் கதளீவனம்வந்து மலயவதியைநோக்கி, அம்மா, உன்னை ஜீமூதவாகனனுக்கு விவாகஞ்செய்து கொள்ளுவதாய் அவருடைய தாய்தந்தையர் ஒப்புக்கொண்டார்கள்; அதற்காக உன்னை அழைத்துவரும்படி ராணியார் கட்டளையிட்டார்கள் என்றாள். இதைக்கேட்டு யாவரும் ஸந்தோஷித்தனர். விதூஷகன் சிறிதுபோது குதித்துக்கூத்தாடிப் பின்பு, நீங்கள் வீடுபோய்விட்டால் நாங்கள் எங்கே போகிறது? இங்கேயே இருக்கவேண்டியதுதானோ என, ஸகி, சுவாமீ, அப்படியில்லை, நீங்கள் வீடுசேருமுன்னமே அங்கே உங்களுக்கு மங்களஸ்நானஞ்செய்வதற்குவேண்டிய திரவியங்கள் அனுப்பப்படுமென்றாள். உடனே அவர்கள் விடைபெற்றுக்கொண்டு மலயவதியுடன் விசுவாவசுவின் அந்தப்புரம் போய்ச்சேர்ந்தார்கள். ஜீமூதவாகனனும் விதூஷகனும் விநோதமாய்ப் பேசிக்கொண்டே ஆச்சிரமத்திற்குச் சென்றனர்.

பிறகு ஒரு நல்ல சுபமுகூர்த்தத்தில் ஜீமூதவாகனனுக்கும் மலயவதிக்கும் கிரமப்படி வெகு ஸம்பிரமமாய் விவாஹம் நிறைவேறியது. அந்தக் கலியாண மகோச்சவத்தின் பெருமைகளை இங்கு எடுத்துரைக்க இடமில்லை. அரசன் மாளிகையில் கலியாணம் நடக்கின்றபோது அந்த நகரமெல்லாம் கலியாணமாயிருந்தது. அந்நகரத்திலுள்ளோர் ஒவ்வொருவரும் அவரவர்வீட்டில் பந்தல் படி முதலிய

* காந்தர்வ விவாகமாவது, ஒரு கன்னிகையும் குமாரனும் ஒருவரையொருவர் தற்செயலாய் நேரில் கண்டவிடத்தே இருவரும் ஆசைகொண்டு தாமேசெய்து கொள்ளும் கலியாணம்.

வைபோட்டு வீதிகளெல்லாம் மகாதோரணம்முதலியவை நாட்டி வெகு அழகாகச் சிங்காரித்து, மிக்க மகிழ்ச்சிகொண்டிருந்தனர். சிலவிடங்களில் ஆட்டம் பாட்டுமுதலிய விநோதங்கள் வெகு விசித்திரமாகநடக்கவும், சிலவிடங்களில் கீதவாத்தியவிநோதங்கள் அனைவரும் கர்ணாநந்தமாய்க் கேட்டுக்களிப்படையும்படி நடந்தேறவும், சிலவிடங்களில் சாஸ்திரபண்டிதர்கள் பற்பலவிதமாகக் கதாப்பிரசங்கம் செய்யவும், பலபேர் சந்தனம் புஷ்பம் ஆடையாபரணம் முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு வெறிக்கக்குடித்துக் கோலாகலமாய்ப் பேசிக்கொண்டு வீதிகள்தோறும் உலாவித்திரியவும் அப்பட்டணமுழுதும் எங்கும் ஒருநாளும் காணாத வெகு விநோதக்காட்சியாயிருந்தது. கலியாணத்தில் ஊர்கோலம் நடந்தவிபவம் இத்தன்மையதென்று எடுத்துரைக்கமுடியாது; அந்தப் பலவகை அதிசயங்களையும் இங்கெழுத இடமில்லையாதலின் இவ்வளவோடு நிறுத்தினோம்.

இங்கு இவ்வாறிருக்க, ஜீமூதவாகனனது ராச்சியத்தை அபகரித்துக்கொள்ளவேண்டுமென வெகுகாலமாகத் தருணம்பார்த்திருந்த மதங்கராஜன், இவர்கள் கலியாணசம்பிரமத்திலிருக்கிற சமயம் பார்த்து, இதுவே தக்கதருணமெனத் தேர்ந்து சென்று சிறிதும் வருத்தமில்லாமல் சுலபமாகவே அவன் இராச்சியத்தைப் பிடித்துக்கொண்டான். இந்தவிஷயம் உடனே மித்திராவசுவுக்குத் தெரியவர, அவன் இது தமக்கு ஒரு பெரிய பழிப்பு; உடனே படையெடுத்துச் சென்று, மதங்கராஜனை வென்று ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென நிச்சயித்து, அவ்விஷயத்தில் ஜீமூதவாகனனுடைய அநுமதிகேட்கும்படி அவனிடத்திற்குச் சென்றான். செல்லுகையில், "மதங்கன் உமது தேசத்தை அபகரித்துக்கொண்டான்; நான் அவனை வென்று மீட்டுக்கொண்டுவந்தேன்" என்று அவரிடம்சொல்வதல்லவோ பெருமை; அதைவிட்டு ராச்சியத்தைப் பகைவன் பிடித்துக்கொண்டான் என்றுமாத்திரம் சொல்வதென்றால் வெட்கமாயிருக்கிறதேயென்று சிந்தித்துக்கொண்டே சென்றான். அவனிடம்போய் மரியாதைபெற்று உட்கார்ந்தபிறகு அவ்விருவருக்கும் அடியில் வருமாறு சம்பாஷணை உண்டாயிற்று:

ஜீமூதவாகனன்: உமது முகத்தில் இன்று அற்புதமாய்க் கோபக்குறி ஒன்றுகாணப்படுகின்றதே; அதன் காரணமென்ன?

மித்திராவசு: அந்தது‌ஷ்டப் பையல் மதங்கன்மீது நாம் கோபம்கூடச் செய்யவேண்டுமோ?

ஜீமூத. மதங்கன் நமக்கு என்ன அபராதம் செய்தான்?

மித்திரா. உங்கள் இராச்சியத்தை அந்தக் கிராதகன் அபகரித்துக்கொண்ட செய்தி அறியீரோ?

ஜீமூத. இதுதானா, மற்றொன்றுமில்லையே? ஆனால் அவ்விஷயத்தில் இவ்வளவு பரபரப்பேன்?

2532

மித்திரா. அரசர்களுக்கு இதைக்காட்டிலும் ஆபத்து வேறென்ன வேண்டும்? பகைவர்கள் நாட்டைப் பிடித்துக்கொண்டால் அவர்களின்மீது கோபங்கொள்ளாமல் ஆநந்தப்படலாமோ?

ஜீமூத. நான் மதங்கனைச் சத்துருவாக நினைக்கவில்லை; நான் சத்துருவாக நினைத்திருப்பது *பஞ்சகிலேசங்களை. மதங்கன் ராச்சியத்தில் ஆசைவைத்து கிலேசத்திற்கு வசப்பட்டு நமது ராச்சியத்தை அபகரித்துக்கொண்டான் என்றால், ஐயோ பாவம் என்று அவன்மீது நாம் இரக்கம் கொள்ளவேண்டுமேயொழியக் கோபங்கொள்ளலாமோ?

மித்திரா. ஐயோ பாவம்! அவன் ஏழை. நமக்கு இவ்வளவு உபகாரம் செய்தானே! அவன்மீது நாம் கருணைகூரவேண்டுவதுதான்.

ஜீமூத. நான் என்னசொன்னாலும் இப்போது உமது புத்தி மாறுபடாது. நாம் வீட்டிற்கு போவோம்; அங்கேபோய் உமக்கு நற்புத்தி உபதேசித்து மதங்கன்மீது தயைவரும்படி செய்கிறேன் என்றான்.

இவ்வாறு சற்றுநேரம் பேசியிருந்து பிறகு இருவரும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். ஜீமூதவாகனன் என்னசொல்லியும் மித்திராவசு அதைக்கேளாமல் மதங்கனுடன் யுத்தஞ்செய்யும்படி சேனைகளைச் சித்தஞ்செய்து அனுப்பினான். சில வித்தியாதரா அரசர்கள் மதங்கனுக்குச் சஹாயமாய் நின்றார்கள்; ஜீமூதவாகனன் மந்திரிகளும் வேறு சில வித்தியாதரர்களும் மித்திராவசுவுக்குச் சார்பாக நின்றார்கள். யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

இது இவ்விதமாயிருக்க ஒருநாள் காலையில் மித்திராவசுவும் ஜீமூதவாகனனும் கடற்கரைக்குச்சென்று வேடிக்கைபார்த்து வரும்படி புறப்பட்டார்கள். அங்கே கடற்கரையோரத்தில் நாகங்களின் எலும்புகள் மலைபோலக் குவிந்திருந்தன. அதைக்கண்டு ஜீமூதவாகனன் பிரமித்து இதென்னவென்று மித்திராவசுவைக்கேட்க, அவன் சொல்லுகின்றான்:

இதன் கதை வெகுவிநோதமானது; சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளும்: கருடன் தனக்கு இஷ்டமானபோது வெகு வேகமாய்ப் பாதாளலோகத்திற்குச் சென்று தனக்குவேண்டிய நாகங்களை எடுத்து பக்ஷித்துவருவது வெகுகாலமாக வழக்கமாயிருந்தது. அதைக்கண்ட நாகராஜாவானவாசுகி ஒருநாள் கருடபகவானை வணங்கி, சுவாமீ, தாம் இப்படி பிரதிதினம் பாதாளலோகம் வந்தால் தமது சிறகு வீசும்வேகத்தால் நாககன்னிகைகள் பயந்து கர்ப்பங்கள் கலங்கிப்போகின்றன. அதனால் எங்கள்குலம் நாசமாய்

* பஞ்சகிலேசமாவன, அவித்தை, அகங்காரம், ராகம், துவேஷம், அபிநிவேசம் என்னும் இவ்வைந்து. நிலையற்றவைகளை நிலையுள்ளவையென நினைத்திருக்கை அவித்தை, நான் என்னும் எனதென்னும் நினைத்திருக்கை அகங்காரம், சிலவற்றில் ஆசைவைப்பது ராகம், பகைப்பது துவேஷம், பிடித்தது விடாமை அபிநிவேசம்.

விடுகிறதென்பதும் தவிர, நாளுக்குநாள் தமது ஆகாரமும் குறைவுபடும். ஆதலால் தாம் தயைசெய்து இங்குவருவதை நிறுத்திவிடவேண்டும். தாம் குறிக்கும் இடத்திற்குப் பிரதிதினம் ஒரு நாகத்தைத் தப்பாமல் அனுப்பிவைக்கிறேன், அதற்கு மஞ்சள்வஸ்திரம் போர்வையாகப் போட்டு அனுப்புகிறேன்; அதை அடையாளமாக வைத்துக்கொண்டு தாம் அந்தநாகத்தை அருந்தவேண்டும்; இவ்வளவு கருணைகூர்ந்தருள்வீராகவென்று வேண்டிக்கொண்டான். கருடனும் அதற்கு உடன்பட்டார். அன்றுமுதல் அப்படியே பிரதிதினமும் நடந்துவருகிறது. அவ்வாறு நசித்தநாகங்களின் எலும்புக்கூட்டம் இது என்று அவன் சொல்லிமுடித்தான்.

ஜீமூதவாகனன் அதைக்கேட்டு மிகவும் பரிதாபமுற்று, தன் சரீரத்தைக்கொடுத்து ஒரு நாகத்தையாகிலும் காப்பாற்றும்படி நேர்ந்தால் வெகு நன்மையாகும் என்று நினைத்துக்கொண்டே மித்திராவசுவைநோக்கி, உலகத்தில் இந்த ஆச்சரியத்தைப் பாரும்:

“ஸர்வாஸுசி நிதாநஸ்ய க்ருதக்நஸ்ய விநாஸிந: ।
ஸரீரகஸ்யாவிக்ருதே ஜநா: பாபாநி குர்வதே ॥”

இந்தச் சரீரம் மலபிண்டமாயும் நிலையற்றதாயும் இருக்கிறதென்று தெரிந்தும் மூடர்களாய் அதனிமித்தம் பலர் பாபஞ்செய்கின்றனரே; அவர்களைப்பார்க்க எனக்கு ஆச்சரியம் உண்டாகின்றது.

பொய்யாகு மிக்காயம் போற்றுவதற் கேபுரிந்து
செய்யாத பாவங்கள் செய்வாரே—வையகத்து
நில்லாத தென்றுணர்ந்தும் நீள்வானின் மின்னேபோல்
கல்லாத மானிடர்கள் காண்.

என்று சொல்லி அந்தச் சரித்திரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டேயிருந்தான்.

அன்று கார்த்திகைப் பண்டிகையாகையால் மருமகனுக்கும் மணமகளுக்கும் வரிசைசெய்யவேண்டிய விஷயத்தைப்பற்றி யோசிக்கவேண்டியதற்காகத் தன் குமாரன் மித்திராவசுவை அழைத்துவரும்படி விசுவாவசு கஞ்சுகியை அனுப்பினான். கஞ்சுகி அவ்விடம்வந்து அது ஸங்கதியை மித்திராவசுவுக்கு ரகசியமாய்த் தெரிவிக்க, மித்திராவசு, மருமகனே, இந்த ஸ்தானம் அபாயத்துக்கு இடமானது; இவ்விடத்தைவிட்டுச் சீக்கிரம் ஆச்சிரமம்போய்ச் சேரவேண்டும்; என்தகப்பனார் என்னை வரும்படி கட்டளையிட்டனுப்பினார்; நான் போய்வருகிறேன், என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குப் போய்விட்டான். ஜீமூதவாகனனோ நாகங்களின் ஸங்கடத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே கடற்கரையில் வெகுநேரம் உலாவிக்கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்க, அன்றையதினம் வழக்கப்படி வாசுகி சங்கசூடன் என்னும் நாகத்தைக் கருடனுக்கு உணவாகும்பொருட்டு அனுப்பி

னன். வாகசியின் சேவகன் சங்கசூடனை அழைத்துவந்தான். சங்கசூடனுடைய தாய் மகன் மாண்டுபோகப்போகிறானே என்னும் துயரத்தினால் அழுதுகொண்டே அவனைப் பின்தொடர்ந்து ஓடி வந்தாள். வரும்போது வழியில் அவர்களுக்கு நடந்த ஸம்பாஷணையாவது:

தாய்: குழந்தாய், பாவி கருடன் உன்னைக் கொன்று தின்னும் போது நான் எப்படி பார்த்துப் பொறுத்திருப்பேனடா?

சங்கசூடன்: தாயே நீ இப்படி விசனப்பட்டு அழுவதனால் எனக்கு யாதொருநன்மையுமில்லை; மனத்துயரம் பின்னும் அதிகமாகின்றது; கொஞ்சநஞ்சமிருக்கின்ற தைரியமும் நீங்கிப் போய்விடுகின்றது.

தாய்: மகனே இதுவரையில் உன் உடம்பில் சூரியகிரணம் கூடச் சுறுக்கென்றுபட்டதில்லையே; அவ்வளவு சுகமான தேகத்தைக் கருடன் கிழிப்பிளந்து தொந்தரவுசெய்யவும், அதை நான் பார்த்துச் சகித்திருக்கவும் விதியோ, தேவா!

சங்கசூடன்: அம்மா, நான் இறந்துபோகிறேன் என்பதற்காக நீ இவ்வளவு துக்கிப்பது நியாயமல்ல; சற்றுயோசித்துப்பார். இவ்வுலகில் மனிதன் ஜநித்தவுடன் மாணம் என்பதே அவனை முதலில் கைப்பற்றுகிறது; பால்காரி (பாலூட்டிவளர்க்கும் தாதி) போலத் தாய் பின்பு அவனைக் கைப்பற்றுகிறாள். இப்பூமியில் பிறந்தவன் என்றைக்காகிலும் ஒருநாள் இறந்தே தீரவேண்டுமல்லவா? ஆறிலும்சாவு, நூறிலுஞ் சாவுதானே. அன்றியும் சாவென்பது உடலுக்கேயன்றி ஆத்துமாவுக்கு ஒருபோதுமில்லை; ஒருவன்கிழிந்த பழையதுணியைநீக்கிப் புதுத்துணிதரித்துக்கொள்வதுபோல ஆத்துமாவும் இந்தப்பழைய உடலை ஒழித்துப் புதிய நல்ல தேகத்தைப் பெறுகின்றது. ஆதலின் ஒருவன் மரிக்கும்விஷயத்தில் நாம் சந்தோஷிக்கவேண்டுமேயல்லது விசனப்படவேண்டுவதில்லை; நீ நில், என்று சொல்லிப் புறப்பட்டுப்போனான்.

தாய்: மகனே, சற்றுநில், கடைசியாய் உன் முகத்தை ஒருதரம் பார்த்துவிட்டுப்போகிறேன்.

சேவகன்: இந்தக்கிழவி இப்படிதான் தொந்தரவுசெய்துகொண்டிருப்பாள்; நாழிகையாகிவிடுகிறது; இவளை அனுப்பிவிட்டுத் துரிதமாக நடந்து வாரும் என்றான்.

(அதுகேட்ட சங்கசூடன், அப்படியே செய்கிறேன் என்று சொல்லித் தாயை நோக்கி, அம்மா, நாழிகையாகிறது, நீ திரும்பிவீட்டுக்குப்போய் விசனப்படாமல் தைரியமாயிரு என்றான். இம்மொழியைச் செவியுற்ற தாய் பெருங்குரல்பாய்ச்சி அழத்தொடங்கினாள். அதைக்கண்ட ஜீமூதவாகனன் அதன் வரலாற்றை நன்றாய் விசாரிக்

வாழ்க்கை ஒருபோதும் அமைவதில்லை. ஆயின்பொருளற்றவர்கள் பின்பு அதற்குக் காரணமான ஊழ்வினை கழிந்தவிடத்து ஒருகால் தலையெடுத்தாலும் தலையெடுக்கலாம்; அருளற்றவர்கள் பிறகு ஒரு போதும் கடைத்தேறுவதில்லை.

"பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றார்
அற்றார்மற் றாத லரிது."

காருணியமென்கிற இந்த நற்குணமானது மனிதர்களாகிய நாம் ஒருவர்க்கொருவர் உபயோகப்படுத்திக்கொள்வதற்குமாத்திரமேயன்று; பசு பக்ஷி மிருகாதிகள் விஷயத்திலும் அது அவசியமானது. இவ்வுலகவாழ்க்கைக்கு இன்றியமையாதவையான பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணங்கள் யாவும் அருளுடைமையைப்பற்றியவையேயன்றி வேறல்ல. இந்தக் குணமொன்று அமைந்திருந்தால்தான் மற்ற நற்குணங்களெல்லாம் ஒருவனிடத்தில் பிரகாசிக்கும்; காருணியமில்லாவிடின் மற்றெந்த நற்குணமிருந்தும் அவை பிரகாசிக்கமாட்டா. இப்படியிருக்கச் சிலர் பிறர்க்குத் தீங்குசெய்யக் கருதுகின்றனர். அது மிகவும் கொடுமையானகாரியம்.

"வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து"

என்றபடி ஒருவன் தன்னினும் மெலியவர்களை வருத்தக் கருதும்போது, தன்னைக்காட்டிலும் வலியவர்கள் அவ்வாறு தன்னை வருத்தினால் தனக்கு எவ்வாறு இருக்குமென்பதை உணர்ந்து தான் அருளுடையவனாகவேண்டும்.

## வத்ஸராஜன் கதை.

முன் இந்த ஜனவிநோதினியில் பிரசுரஞ்செய்த வாஸவதத்தையின்கதையிலும், ரத்னாவலி நாடகக்கதையிலும் வத்ஸராஜனைப்பற்றிக் கூறியிருக்கின்றதே. அவன் பாண்டவர்களின் வமிசத்தில் உதித்தவனென்றுமாத்திரம் அங்கே கூறியிருக்கின்றதேயொழிய, அவன் பிறப்பு வரலாறு முதலியவொன்றும் கூறப்படவில்லை. அக்கதை நற்குணங்கள் பலவற்றுள்ளும் மேலானகுணமாகிய அருளின் பெருமையை விளக்குகின்றதாதலின் அதை இதனடியில் எழுதுகின்றோம்.

பாண்டுமகாராஜாவின் மைந்தர்களான தருமபுத்திராதிகள் ஐவருக்கும் துரியோதனாதிகள் நூற்றுவருக்கும் பாரதயுத்தம் எனப் பேர்பெற்ற பெரும்போர் நடந்ததென்றும், அதில் பாண்டவர்கள் வெற்றியடைந்தார்களென்றும், இவ்விஷயத்தைக் 'கூந்தல்முடித்தல்' என்னும் கதையில் விவரமாய்ப் பிரசுரம்செய்திருக்கின்றோம் அல்லவா.

அந்தப் பாண்டவர்களில் மூன்றாவனான அர்ச்சுனன் கிருஷ்ணனுடைய உடன்பிறந்தாளான சுபத்திராதேவியை மணம்புரிந்

தான். அவளுக்கு அபிமன்னியு என்றொரு புதல்வன்பிறந்தான். அவன் தன் தகப்பனுரிடம் தநுர்வேதாப்பியாசம் செய்துவந்து, அவர்கள் வனவாஸம்போனபோது தன் மாமன் வீட்டில் சேர்ந்து ப்ரத்தியும்னனிடத்தில் மற்றும் பலவகையான போர்ப்பழக்கங்களும் பயின்றுவந்தான்.

பாண்டவர்கள் அஞ்ஞாதவாஸம் செய்யும்போது அர்ச்சுனன் பிருகந்நளை என்னும் அலிவேஷம்கொண்டு விராடராஜன் அந்தப்புரத்தில் பெண்களுக்கு ஆட்டம்பாட்டுகள் பயிற்றுவித்துவந்தான். மாடுபிடிசண்டையில் அவன் தன் மகனுக்குச்செய்த பேருதவியை நினைத்து விராடராஜன் தன் மகளான உத்தரையை மணம்புரிந்துகொள்ளும்படி அர்ச்சுனனை வேண்டிக்கொண்டான். தான் அவளுக்கு வித்தைகற்பித்த ஆசிரியனாகையால் அவளை மணம்புரிவது நீதிநூன்முறைக்கு விரோதமானதென்று தடுத்து, தன் மகன் அபிமன்னியுவுக்கு அம்மகளை மணம்புரிந்துகொண்டான்.

மகாபாரதயுத்தம் நடக்கும்போது உத்தரை மூன்றுமாதம் கர்ப்பிணியாயிருந்தாள். துரோணாசாரியர் சேனாபதியாயிருந்து நடத்திய யுத்தத்தில் அதர்மமாய் ஐந்து ஆறுவீரர்கள் ஒன்றுசேர்ந்து அபிமன்னியுவை வதைசெய்துவிட்டார்கள்.

பாரதயுத்தம் முடிவில் அசுவத்தாமா *அபாண்டவாஸ்திரப் பிரயோகம்செய்தான். அப்போது கிருஷ்ணன் பாண்டவர்கள் ஐவரும் உத்தரையின் கர்ப்பத்திலிருந்த சிசுவும் மாத்திரம் உயிர்தப்பும்படி அதற்குவேண்டிய முயற்சிசெய்து காப்பாற்றியருளினர். ஆயினும் அந்த அஸ்திரம் கிருஷ்ணனுடைய மகிமையால் பாண்டவர்கள் ஐவரையும் ஒன்றும் செய்யவல்லதாகவில்லையாயினும், உத்தரையினது கருவைக் கரிக்கட்டையாக்கிவிட்டது. பத்துமாதம் ஆனஉடனே உத்தரை பிரஸவித்தாள். குழந்தை கரிக்கட்டையாகக் கீழேவிழுந்தது. அதுகண்டு சுபத்திராதேவியும் பாண்டவர்களும் மிக்கவிசனமடைந்து, தமதுகுலம் அழிந்துபோகாதிருக்கும்படி அக்குழந்தையை எவ்வகையிலாயினும் காப்பாற்றியருளவேண்டுமெனக் கிருஷ்ணனைப் பிரார்த்தித்தார்கள். அவர் கட்டையாயிருந்த அக்குழந்தையைத் தமது திருவடியினால் பரிசித்து உயிர்பெற்றெழும்படி செய்தார். அவனுக்குப் பரீக்ஷித்தென்று பெயரிடப்பட்டது.

பாண்டவர்கள் கடைசியில் மகாப்பிரஸ்தானம் போகும்போது பரீக்ஷித்துக்குப் பட்டாபிஷேகம்செய்து போனார்கள். அவன் ஒரு நாள் வேட்டைமார்க்கம்போய்த் திரும்பிவரும்போது தாகத்தால் வருந்தி, அருகே இருந்த சமீகமுனியின் ஆச்சிரமத்திற்குள் புகுந்தான். அப்பொழுது அவர் யோகத்திலிருந்தார்; அங்கே வேறு யாரு

* அபாண்டவாஸ்திரம்—பாண்டவர்களே உலகில் இல்லாமல் போகவேண்டுமென்று சொல்லி விடும் ஓர் ஆயுதம்.

மில்லை. அரசன் எவ்வளவு சந்தடிசெய்தும் அவர் கண்ணைத் திறக்க வில்லை. அதுகண்டு கோமகன் அருகே செத்துக்கிடந்த ஒருபாம்பை எடுத்து அவர் கழுத்திலேபோட்டான். அவர் அப்போதுகூடச் சற்றும் சலிக்கவில்லை; அதனால் அவ்வேந்தன் வீடுபோய்ச்சேர்ந்தான்.

மாத்தியான்னிகஸ்நாநம்செய்ய நதிக்குச்சென்றிருந்த சமீகமுனிவர் குமாரர் ஆச்சிரமத்திற்குவந்து தம் பிதாவின் கழுத்தில் செத்த பாம்பு விழுந்துகிடப்பதைப் பார்த்து மிக்கசினங்கொண்டு, சிறிதும் அச்சமில்லாமல் எவன் இவ்வாறு செய்தானோ அவன் இன்றையதினத்துக்குப் பதினெட்டாவதுநாள் பாம்புகடித்துமடிந்துவிடக்கடவனென்று சபித்துவிட்டு, தம் தகப்பனுருக்கு நேரிட்ட அவமானத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

யோகம்முடிந்து எழுந்த சமீகமுனிவர் தம் கழுத்திலே பாம்பு இருப்பதையும், தம் குமாரன் கோபத்தால் புருவம் நெறித்து உதடு துடிக்க உட்கார்ந்திருப்பதையும் கண்டு அதன் வரலாறு என்னவென்று விசாரிக்க, அவர், தாம் நீராடிவருகையில் கழுத்திலே பாம்புபோடப்பட்டிருந்ததையும், அதுகண்டு அப்படி செய்தவனைத் தாம் சபித்ததையும் தெரிவித்தார்.

அதைக் கேட்கையிலேயே ஐயோவென்று உடனே சமீகமுனிவர்க்கு அமிதமான காருணியம் உண்டாயிற்று. அந்தக்ஷணமே அவர் யோகதிருஷ்டியால் பார்த்து எல்லாவற்றையும் தெளிவாய்த் தெரிந்துகொண்டு புத்திரனை நோக்கி, வத்ஸா, நீ செய்த காரியம் மிகவும் பிசகானது; சற்றும் ஆலோசியாமலும், என்னையும் கேளாமலும் சபித்துவிட்டாய். அவ்வாறு சபிக்கப்பட்டவன் பரீக்ஷித்து மகாராஜன், பாண்டவர்களின் பௌத்திரன்; தர்மிஷ்டன். அவன் வேட்டையாடிவரும்போது தாகத்தினால்வருந்தி இவ்விடம் வந்தான். அவனுக்கு யாரும் அதிதிபூஜைசெய்யாமையால், அவன் இந்தக் காரியம் செய்தான். அதனால் எனக்கு என்னகுறைவு. நீ இதுவரையில் எவ்வளவோ தவஞ்செய்தும் பொறுமையைப் பாதுகாக்க வல்லமையற்றவனாயிருக்கிறாய். முனிவர்களுக்குப் பொறுமை மிகவும் அவசியமானது. அது உன்னிடம் இல்லாமல் போய்விட்டது. மேலும் பொறுமை யில்லாதவன் ஒன்றுக்கும் பயன்படான்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை."

"ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து."

"திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று."

அவ்வரசனுடைய மகன் மிகவும் பாலனாயிருக்கிறான்; நீ ஒன்றையும் ஆலோசியாமல் ஆக்கிரத்தினால் பூலோகத்திற்கே ஒரு பெருந்தீமை

யை யுண்டாக்கிவிட்டாய். இனிப் போனதைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை; போனதைச் சொல்லுகிறவன் பித்தனல்லவா? நீ உடனே விரைவாய் அவ்வரசனிடம் சென்று நடந்தவரலாற்றை விவரமாய் அறிவித்து இம்மை மறுமை என்னு மிரண்டிடத்திற்கும் ஸாதகமான நற்காரியங்கள்செய்து சித்தமாயிருக்கும்படி தெரிவித்துவா என்று அவரை அனுப்பினர். அவர் அரசனிடம்போய் எல்லாவற்றையும் தெளிவாய்த் தெரிவித்தார்.

அரசன் அதுகேட்டுச் சமீகமுனிவருடைய பொறுமைக்கும் காருணியத்திற்கும் மிக்க வியந்து தெய்வசங்கற்பம் எப்படியிருக்குமோ; முனிவர் கூறியபடி நாம் சித்தமாயிருக்கவேண்டுவதே கடமையென நிச்சயித்து, உடனே தன் குமாரனுகிய ஜனமேஜயனுக்குப் பட்டங்கட்டி ராச்சியபாரத்தை மந்திரிமாரிடம் ஒப்புவித்து ஊருக்கு வெகுதூரத்தில் அகாதமான கங்காநதியின்மத்தியிலே இருப்புக் கம்பிகள்நாட்டி அவற்றின்மேல் ஒரு ஆச்சிரமம்கட்டி, பாம்பு வரவொட்டாமல் ஏற்பாடுசெய்துகொண்டான். ஆயினும், ரிஷிகளின் வாக்கு ஒருகாலும் பொய்க்காது; விதியை மதியால் வெல்லக் கூடுமா? வருவது வந்தேதீரும் என்று தனக்குள் தேர்ந்து, தனக்குத் தத்வஞான உபதேசஞ் செய்யும்படி வியாஸபுத்திரராகிய சுகபிரம்மரிஷியைத் துதிசெய்து வேண்டிக்கொள்ள, அவர் அரசனிடம்வந்து அந்தப்பதினெட்டுநாளில் அவனுக்கு ஸ்ரீபாகவதத்தை உபதேசம்செய்து தத்துவஞானம் பிறப்பித்து விடைபெற்றுச் சென்றார்.

இதற்குள் ரிஷிபுத்திரர் சபித்தகாலம் சமீபித்தது. தக்ஷகன் பிராமணவடிவம்கொண்டு பரீக்ஷித்து வசிக்கும் இடத்தைநோக்கி வாலானன். அது தெரிந்து பரீக்ஷித்தைப் பிழைப்பிக்கும்படி இந்திரன் அசுவினீதேவதைகளை அவனிடம் அனுப்பினன். அவ்வசுவினீதேவர்கள்வழியில் தக்ஷகனைச்சந்தித்தார்கள். ஒருவர்க்கொருவர்உண்மையைத் தெரிந்துகொண்டவுடனே, அவர்களுடைய ஸாமர்த்தியத்தைப் பரீக்ஷிக்கும்பொருட்டுத் தக்ஷகன் அருகே இருந்த ஒருவிருக்ஷத்தில் தன் விஷத்தைக்கக்கினன். உடனே அம்மரம் வெந்துபோய்விட்டது. அசுவினீதேவதைகள் அதை மறுபடியும் முன்போலத் தழைப்பித்துவிட்டார்கள். தக்ஷகன் அதுகண்டு அவர்களுடைய சாமர்த்தியத்துக்கு வியந்தானுயினும், ரிஷிகளின் சாபானுக்கிரகங்களை மாற்றிவிடத் தொடங்கினுல் உலகமரியாதை கரைபுரண்டுபோகும் என்று போதித்து அவர்களைத்திருப்பிவிட்டு, தான் எலுமிச்சம்பழவடிவமாய் அரசன் ஆச்சிரமத்தருகே சென்றான். அரசன் அதைப் பழம் என்று கையில் எடுக்க, உடனே தக்ஷகன் அரசனைக் கடித்துவிட்டான். தக்ஷணமே பரீக்ஷித்துக்குப் பிராணவியோகமாகிவிட்டது. பிறகு அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகள் எல்லாவற்றையும் ஜனமேஜயனைக்கொண்டு நடப்பித்தார்கள்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

ஜனமேஜய மகாராஜனுக்கு வயதுவந்து அரசாட்சிசெய்யும் காலத்தில் அவன் தன் தகப்பனர் பாம்புகடித்து இறந்துபோன சங்கதிகேட்டு மிக்க விசனமடைந்தவனாய், சர்ப்பங்களிடத்தில் அதிக கோபங்கொண்டு, சர்ப்பகுலமே பூண்டற்றுப்போகும்படி செய்யவேண்டுமெனத் தீர்மானித்து மிகக்கொடியதான ஒரு சர்ப்பயாகம் செய்யத் தொடங்கினன். அந்த யாகத்தில் ஆகாயமளாவிக் கொழுந்துவிட்டு எரிகின்ற ஓமகுண்டத்திலே மந்திரங்களின் மகிமையாலே மழைத்தாரைகள்போல ஸகலமான ஸர்ப்பங்களும் வந்து விழுந்து கொண்டிருந்தன. வெகுவாய் எல்லாம் வந்துவிழுந்து மாண்டபிறகு கடைசியில் தக்ஷகன் வரவேண்டிய சமயமாயிற்று. அதி உக்கிரமான யாகமந்திரங்களின் வலிமைக்குத் தப்பமுடியாமல் அவன் மிகவும் பயந்து இந்திரனைச் சரணமடைந்து அவன் கட்டிற்காலில் சுற்றிக்கொண்டான். அதை அரசன் அறிந்து இந்திரன் தக்ஷகனைவிடாமற் போனல் இந்திரனது கட்டிற்காலில் சுற்றியபடியே இந்திரனேடு கூடத் தக்ஷகன் வந்து இதில் விழும்படி அழைக்கவேண்டுமென உத்தரவுகொடுத்தான். அவர்கள் அவ்வாறே அழைக்கும்போது அப்படியே கட்டிலோடு இந்திரனை இழுத்துக்கொண்டுவந்துவிட்டது. அதுகண்டு அனைவரும் ஹா! ஹா! என்று அச்சமுற்று நின்றார்கள். அந்தத்தருணத்தில், ஆஸ்திகரென்னும் முனிவர் ஜனமேஜயனுக்குப் பலவாறு தத்வஹிதோபதேசங்கள்செய்து, தக்ஷகனைமன்னித்து யாகத்தை அவ்வளவோடு நிறுத்தவேண்டுமென வேண்டிக்கொள்ள, அரசனும் 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்று அவர் மொழியை மேலாகமதித்து தக்ஷகனிடத்தில் கருணைகூர்ந்து, அவ்வாறே யாகத்தை நிறுத்திவிட்டான். ஜனமேஜயன் தன்கட்டளைப்படி நடந்துகொண்டதற்காக அம்முனிவர் அவனுக்கு அனேக ஆசீர்வாதங்கள் செய்தருளினர்.

அந்த யாகம் நடந்தகாலத்திலேதான் வைசம்பாயனமுனிவர் மகாபாரதகதைமுழுமையும் ஜனமேஜயமகாராஜனுக்கு எடுத்துக்கூறியது. இவன் அரசுசெலுத்தியது இப்போதைக்குமுன் 50வது நூற்றாண்டில் என்றும், அது கலியுகத்தின் ஆதியென்றும் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட மகானுபாவனும் பாண்டவர்களின் நப்தா (கொள்பேரன், அதாவது பேரனுடைய பிள்ளை) வும் ஆகிய ஜனமேஜயனுக்குச் சதாநீகனென்றொரு குமாரன்பிறந்தான். ஜனமேஜயனுக்குப் பின்பு அவன் அரசனாயினன். அக்காலத்தில் அஸ்தினபுரம் அசவுக்கியமானவிடமாயிருந்ததாகையால், அவன் வத்ஸதேசத்திற்சேர்ந்த கௌசாம்பிநகரத்தை ராஜதானியாக்கி அதில் அரசுசெலுத்திவந்தான். அவன் பட்ட மகிஷிக்கு விஷ்ணுமதி என்று பெயர். வெகுகாலம் அவ்வரசனுக்குப் புத்திரபாக்கியமில்லாமலிருந்தது;

கடைசியில் சாண்டில்யமுனிவர் புத்திரகாமேஷ்டி செய்விக்க, அதனால் ஒரு குமாரனுண்டானான். அவனுக்கு ஸஹஸ்ராநீகனென்று பெயரிடப்பட்டது. ஸஹஸ்ராநீகனுக்கு இளவரசுப்பட்டஞ் சூட்டிவிட்டுச் சதாநீகன் சுகமாகவாழ்ந்துகொண்டிருந்தான்.

அவ்வாறிருக்கையில் ஒருகால் தேவலோகத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒரு பெரியயுத்தம் துவக்கமாயிற்று. அப்பொழுது இந்திரன் தனது ரதத்தை அனுப்பித் தனக்குச்சகாயமாய்ச் சதாநீகனை வரவழைத்து யுத்தம்செய்யவேண்டினான். சதாநீகன் அந்தத் தேவயுத்தத்தில் அனேகம் அசுரர்களையும் யமதம்ஷ்டிரன்முதலிய சேனாபதிகளையும் கொன்றானாயினும், கடைசியில் அவர்களால் கொலையுண்டு மரணமடைந்தான். பிறகு அவன் சரீரத்தை அதேரதத்தி லேற்றித் தேவேந்திரன் கௌசாம்பிநகரத்துக்கு அனுப்ப, விஷ்ணுமதி அந்தத் துயரம் பொறுக்கமாட்டாமல் கணவனோடுகூட உடன்கட்டையேறி உயிரிழந்தாள்.

அப்பொழுது ஸஹஸ்ராநீகன் சிறுவயதாயிருந்தபோதிலும், யோகந்தரன் என்னும் முக்கியமந்திரியும், சுப்பிரதிகனென்னும் முக்கிய சேனாபதியும் ஆகிய இவர்களுடைய மந்திராலோசனாபலத்தினால் கிரமப்படி அரசுசெலுத்திவந்தான்.

அக்காலத்தில் தேவேந்திரன் தன் சிநேகிதனுடைய புத்திரன் என்பதுபற்றி ஸஹஸ்ராநீகனுக்கு மிக்க மரியாதைசெய்யவேண்டுமென நினைத்து அவனைத்தேவலோகத்திற்கு வரவழைத்தான். அவன் அப்படியே தேவலோகத்திற்குச் சென்றபோது அங்கே நந்தநவனத்தில் அனேகர் தங்கள் தங்கள் ஸ்திரீகளோடே விளையாடிக்கொண்டிருந்தனர். அதுவரையில் அவனுக்கு விவாஹமாகாமையினால் அதைக்காணவே தானும் அவ்வாறு தகுந்த ஒரு மனைவியைப் பெற வேண்டுமென்ற விருப்பம் அவன் மனதில் உண்டாயிற்று. இந்திரன் அதை அறிந்து, நண்பனே, நீ இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டாம்; அயோத்தியாபுரி அரசனுக்கு மிருகாவதி என்றொரு பெண்மணி இருக்கிறாள்; நீ அவளை விவாஹம்செய்துகொள், என்று சொல்லித் தக்கமரியாதைகள்செய்து அனுப்பினான். ஸஹஸ்ராநீகன் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து திரும்பிப்போகும்போது அந்தமிருகாவதியையே மனதில் சிந்தித்துக்கொண்டுபோயினான். வழியில் திலோத்தமை என்னும் தேவமடந்தை இவன் அழகைக்கண்டு வியந்து ஒரு பொழுது தன்னிடம் தங்கிப்போகும்படி வேண்டினாள். அவன் அதை அலக்ஷியம்செய்து மறுமொழிகூடச் சொல்லாமல், தேரை நிறுத்தாமலே நடத்திக்கொண்டு சென்றான். அதைக்கண்டு திலோத்தமை கோபித்து, நீ யாரை நினைத்து என் வேண்டுகோளை உதாசீனம்செய்து செல்லுகின்றாயோ, அவள் உனக்கு மனைவியாக வாய்த்தாலும் பதினான்குவருஷம் நீ அவளை விட்டுப் பிரிந்திருக்

தக்கடவை என்று சபித்தாள். அந்த வார்த்தை தேரோடுகிற ஓசையினுல் அரசனுக்குக் கேட்கவில்லை; ஸாரதிக்குக் கேட்டிருந்தும், அப்போது அதை அவன் அரசனுக்குத் தெரிவிக்கவில்லை.

பிறகு ஸஹஸ்ராநீகராஜன் கௌசாம்பிநகரம் போய்ச் சேர்ந்த உடனே தான் கருதியவிஷயத்தை மந்திரிகளுடன் ஆலோசித்து அவர்கள் அனுமதியின்படியே அயோத்தியாபட்டணத்திற்குத் தூதனை அனுப்பினன். அந்நகரத்தரசனுகிய கிருதவர்மன் அது கேட்டு மிக்கசந்தோஷமடைந்து நல்ல முகூர்த்தத்தில் மிருகாவதியை ஸஹஸ்ராநீக மகாராஜனுக்கு விவாஹம்செய்துகொடுத்தான்.

கலியாணமானபின்பு ஸஹஸ்ராநீகன் தன்பத்தினியுடனே கௌசாம்பிநகரம் வந்துசேர்ந்து சிலகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். அப்போது முக்கியமந்திரியாகிய யோகந்தராஜுக்கு யௌகந்தராயணனென்றும், முக்கிய ஸேனுபதி சுப்பிரதீகனுக்கு ருமண்வான் என்றும், அரசனுடைய விதூஷகனுகிய சுமுகனென்பவனுக்கு வஸந்தகனென்றும் பிள்ளைகள் பிறந்தார்கள்.

சிலநாள் சென்றபின்பு மிருகாவதி கர்ப்பவதியாயினுள். கர்ப்பிணியான ஸ்திரீகள் எதை விரும்பினுலும் உடனே அதை நிறைவேற்றிக்கொடுக்கவேண்டுவது கடமையல்லவா? அவ்வண்ணமே அரசன் ஒருநாள் உனக்கு என்ன இஷ்டமென்று மிருகாவதியைக் கேட்டபோது, அவள் ஒரு மடு நிறைய உதிரத்தைத்தேக்கி அதில் ஜலக்கிரீடை செய்யவேண்டுமெனத் தனக்கு விருப்பமுண்டாகிறதென்றுள்.

அரசன் அதிக தர்மிஷ்டனும் ஜீவகாருணியமுடையவனுமாகையால் ஜந்துவதைசெய்ய மனமில்லாமல், அரக்குமுதலிய சாயப்பொடிகளைச்சேர்த்து ஓர்மடுவின் தண்ணீரை ரத்தம்போலச் சிவக்கச்செய்து அந்த மடுவை மிருகாவதிக்குக்காட்டினன். மிருகாவதி அது உண்மையான ரத்தமடுவென்று நினைத்துச் சந்தோஷமாய்ச் சிலகாலம் அதில் கிரீடைசெய்துகொண்டிருந்தாள்.

அப்படியிருக்க ஒருநாள் ஆகாயத்திலே பறந்துபோய்க்கொண்டிருந்த ஒரு பெரியகருடன் இவளை ஒரு ஜந்து என்று நினைத்துத் திடீரென்று அவள்மேல் பாய்ந்து மூக்கால்தூக்கி எடுத்துக்கொண்டு போய், வெகுதூரம் சென்று அவள் ஒரு மனுஷியாயிருக்கக்கண்டு அங்கே சமுத்திரத்தினடுவிலிருந்த ஒரு தீவிலே அவளை இறக்கிப் போய்விட்டது.

அன்றையதினம் ஜலக்கிரீடைக்குப்போன மிருகாவதி வழக்கப்படி திரும்பிவராமற்போகவே பட்டணமெங்கும் பெருங்கூச்சலுண்டாயிற்று. தூதர்கள் நாலாமூலையிலும் அவளைத்தேடத் தலைப்பட்டார்கள். அரசனும் பித்தம்பிடித்தவன்போல இங்கும் அங்கும் தேடத்தொடங்கினன். எங்கும் அவளைக்காணவில்லை. அதனுல் அ

சன் பிராணனை விட்டுவிடவேண்டுமென்றுகூட நிச்சயம்செய்யும்படியாயிற்று. அவளது நற்குணநற்செய்கைகள் நினைவுக்குவரும்போதெல்லாம் அவனுக்கு ஆருத்துயரமுண்டாகும். இவ்வாறிருக்குந்தருணத்தில் இந்திரனுடைய ஸாரதியாகிய மாதலி அவனிடம்வந்து திலோத்தமை சபித்த சமாசாரத்தைத் தெரிவித்து, 14 வருஷம் ஆனவுடனே உம்மனையாட்டி அவசியம் உம்மிடம் வந்துசேருவாள்; இதற்காக நீர் சிந்தைகலங்கவேண்டாம் என்று தேறுதல் சொல்லிப்போயினன். அதனால் அரசன் பிராணனைவிடாமல் தரித்திருந்தானாயினும் மதிமயக்கங்கொண்டவனாகிக் கண்டவிடமெங்கும்தேடுவதும், கிளி குயில் மயில்முதலிய பறவைகளையும் பற்பல விலங்குகளையும் கேட்பதுமாய்க் காலங்கழித்துவந்தான்.

இவர்கள் இவ்வாறிருக்கட்டும்; மிருகாவதியின் செய்தியைக் கேளுங்கள்: அந்த நடுத்தீவில் நிர்மானுஷியமான காட்டிலே அவள் தனியே நின்று நடுங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு மலைப்பாம்பு அவளை விழுங்கிவிட்டது. தூரத்திலிருந்து அதைப்பார்த்திருந்த ஒரு புண்ணியபுருஷன் உடனே ஓடிவந்து, அந்தப்பாம்பைப்பிடித்து மிருகாவதியை மீட்டுவிட்டு மறைந்துபோயினன். கண்ணுக்குக்கண்ணான கணவனை விட்டுப்பிரிந்து அந்தரமான அப்பெருங்காட்டில் வந்து, துணையாவார் யாருமில்லாமல் இவ்வாறு அல்லாடும்படி நேர்ந்தது என்ன துர்ப்பாக்கியமோ என்று துக்கக் கடலில் மிகவும் ஆழ்ந்தவளாய், பிராணனை விட்டுவிடவேண்டுமென நினைத்து அவள் அந்தக் காட்டிலே போய்க்கொண்டிருந்த ஒரு காட்டானையின்முன்னேபோய் நின்றாள். அவளுடைய கற்பின்மகிமையாலும் ஆயுள்வலிமையாலும் அது அவளைக்கொல்லாமல் ஒதுங்கிப்போய்விட்டது. அதன்மேல் மிருகாவதிக்கு மிகவும் அதிகமான துயரம் உண்டாகியது. உயிரை ஒழித்துவிட்டால் பிறகு சுகப்படலாமென்று நினைத்தால் தெய்வம் அதையும் நிறைவேற்றவில்லையே என்றுசொல்லிப் பெருங்குரல்பாய்ச்சி அழத்தொடங்கினாள்.

அவள் அழுத குரலைக்கேட்டு அருகே இருந்த ஒரு தடாகத்தில் நீராடவந்திருந்த ஒரு முனிவர் அவளருகேவந்து அவள் துயரத்தை விசாரித்து, அவளிடத்தில் மிகவும் மனமிரங்கி, சீக்கிரமே நீ உன் பர்த்தாவுடன் சேருவாயென்று தேறுதல்சொல்லி, அவளைத்தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய்ச் சிலநாள் தன் ஆச்சிரமத்தில்வைத்துப் போஷித்துவந்து, பிறகு சிறிது தூரத்துக்கப்பாலிருந்த ஜமதக்கினிமுனிவர் ஆச்சிரமத்தில் கொண்டுபோய்விட்டார்.

ஜமதக்கினிமுனிவர் மிருகாவதியைத் தன் சொந்தப்பெண்ணை விடப்பதின்மடங்கு அதிகமாய்ப் பாதுகாத்துவந்தார். அவ்வாறு பாதுகாத்துவருகையில், உனக்கு வீரியசவுரிய பராக்கிரம முதலிய சகலமான சற்குணங்களும் அமைந்தவனும் மகாமேதாவியும் பாக்கியவானுமாகிய ஒருபுதல்வன் உண்டாகப்போகிறானென்றும்,சொற்